## அக்டோபர் - 18

**"தன் வேலையில் அசதியாயிருப்பவன் அழிம்பனுக்குச் சகோதரன் ."  -  நீதி  18 : 9.**

சில வழிகளில் கர்த்தரின் மனதைப்புரிந்து கொள்ளுவதில் கர்த்தரின் பிரதிஷ்டை பண்ணியிருக்கிற ஜனங்கள் எவ்வளவு பெரிய முன்னேற்றத்தை அடைந்திருந்தாலும், இந்த விசேஷ சங்கதியில் அவர்கள் இன்னமும் குறையுள்ளவர்களாய் இருக்கிறார்கள். என்று உணராமல் அவர்களில் யாரிடத்திலாவது நாம் பயனற்ற தன்மையை பார்க்க முடியாது. ஈவை உயர்வாக மதித்தல், ஈகிறவருக்குரிய மரியாதை ஆகிய இரண்டும், பரம பிதாவிடமிருந்து நமக்கு வருகிற உலக சம்பந்தமான, ஆவிக்கடுத்த எல்லா காரியங்களில் சம்பந்தமாக உள்ள ஜாக்கிரதையையும் ஒரு உக்கிராண விசாரிப்பையும் குறிக்கிறது. நம்முடைய கர்த்தரின் உவமைகளின்படி இப்பொழுது நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற உலக சம்பந்தமான ஆவிக்கடுத்த தாலந்துகள், சந்தர்ப்பங்கள், ஆசீர்வாதங்கள் இவைகளை நாம் எப்படி உபயோகிக்கிறோம் அல்லது எப்படி துஷ்பிரயோகம் செய்கிறோம் என்ற அளவால் நம்முடைய அன்பையும் ஆர்வத்தையும் அவர் அதிகமான அளவு அளக்கிறார். **- Z '04, 77 (R 3332)**

அசதியாயிருப்பவனுடைய ஆவி நஷ்டத்தையுடையதாயிருக்கிறது. அவன் தன்னுடைய அருமையானதும் மீட்க முடியாததுமான நேரத்தை வீணாக்குகிறான். விருத்தி செய்யக்கூடிய தனது தாலந்துகளை அவன் வீணாக்குகிறான். தன்னுடைய தக்க சந்தர்ப்பங்களை அவன் வீணாக்குகிறான். அப்பொழுது அவைகள் அவனை விட்டோடி பிறரை அடைகின்றன. அவன் தனது சக்தியை வீணாக்குகிறான். ஆகையால் அது சோம்பேறித்தனத்தினால் சீர்கெட்டுப்போகிறது. அவன் தனது ஆரோக்கியத்தை வீணாக்குகிறான். அதற்குத் தேகப்பயிற்சி வேண்டும். அவன் தனது நன்மதிப்பை வீணாக்குகிறான். அது ஒருபொழுதும் திரும்ப வராது. அவன் தனது சிநேகிதரை இழந்து விடுகிறான். அவர்கள் அவனைக் கைவிடுகிறார்கள். அவன் தனது உடமையை வீணாக்குகிறான். அவைகள் அவனிடமிருந்து எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அவன் தனது குணத்தை வீணாக்குகிறான். அது அவனை இழிவுபடுத்துகிறது. அவன் தனது ஜீவனை வீணாக்குகிறான். அது அவனிடமிருந்து எடுத்துக் கொள்ளப்படுகிறது. அவன் தனது நித்தியத்தை வீணாக்குகிறான். அது அவனுக்கு அற்றுப் போகிறது. ஆகையால், கர்த்தரின் பரிசுத்தவான்களாகிய நமக்கு சோம்பேறித்தனம் தூரமாயிருப்பதாக. **- P '34, 143.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**நீதி 6:6-11; 10:4,5,26; 12:11,24,27; 13:4; 15:19; 19:15,24; 20:4,13; 21:5,25; 22:29;23:21; 24:30-34; 26:13-16; 27:23-27; 30:25-28; 31:13-27; பிரச 10:18; ஏசா 56:10; மத் 25:26,27; ரோம 12:11; எபே 4:28; 1தெச 4:11,23; 2தெச 3:10-12; எபி 6:12; 1தீமோ 5:8.**

**கோபுர வாசிப்பு : Z '05, 43 (R 3502).**

**வினாக்கள் : இந்த வசனம் இந்த வாரத்தில் எனக்கு என்ன கருத்தில் அமைந்தது? அதன் அபிப்பிராயத்திற்கு ஏற்ப நான் எவ்வாறு இயங்கினேன்? பலன்கள் எவை?**